**கவனிக்க.-** *2014.09.12 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1881 - 2014 සැප්තැම්බර් මස 19 වැනි සිකුරාදා - 2014.09.19

*1881 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 1458 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1462 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | 1465 |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 1458 | ஏல விற்பனைகள் | 1467 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** *காணி பராதீனப்படுத்தல் மீதான மட்டுப்பாடுகள் சட்டமூலம் 2014, ஓகத்து மாதம் 15 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2014, ஒற்றோபர் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

**இலங்கைப் புகையிரத சேவைகள்**

பெறுகை அறிவித்தல்

ஒரு (1) Shock Absorber Testing இயந்திரத்தின் பெறுகை, பொருத்துதல் மற்றும் செயற்படுத்துதல்

பெறுகை இல. : SRS/F. 7080

இலங்கைப் புகையிரத சேவைகளுக்கு ஒரு (1) Shock Absorber Testing இயந்திரத்தினை வழங்குதல், பொருத்துதல் மற்றும் செயற்படுத்தலுக்காக, உற்பத்தியாளர்கள்/வழங்குநர்கள் ஆகியோரிடமிருந்து கொழும்பு 10, த. பெ. இல. 355, புகையிரத தலைமையகம், இலங்கை புகையிரத சேவைகள், திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் அவர்களால் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் பெற்றுக்கொள்ளப்படும்.

2. விலைமனுக்கள் 2014, செத்தெம்பர் 26 ஆந் திகதியன்று பி. ப. 2.00 மணிக்கு மூடப்படும்.

3. மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமான 2,500 ரூபாவை மாத்திரம் செலுத்திய பின்னராக 2014, செத்தெம்பர் 25 ஆந் திகதியன்று பி. ப. 3.00 மணி வரைக்கும் இலங்கை, கொழும்பு 10, ஒல்கட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து பெறக்கூடிய படிவங்களில் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. விலைமனுக்களை கொழும்பு 10, ஒல்கட் மாவத்தை, புகையிரத தலைமை அலுவலகத்தில் அவைகளை மூடியவுடன் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுக்களைத் திறக்கும்போது விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகார அங்கீகாரம்பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

5. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள், பதிவுத்தபாலில் அனுப்பப்படலாம். அல்லது பின்வரும் முகவரியில் நேரடியாக ஒப்படைக்கப்படலாம் :-

தவிசாளர்,
திணைக்கள பெறுகைக் குழு,
இலங்கை புகையிரத சேவைகள்,
புகையிரத தலைமை அலுவலகம்,
ஒல்கட் மாவத்தை,
கொழும்பு 10,
இலங்கை.

6. விலைமனு ஆவணங்களை இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலை அத்தியட்சகரின் அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சிக்கலாம்.

7. மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து பின்வருபவருடன் தொடர்பு கொள்ளவும் :

புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகர்,
புகையிரத களஞ்சியசாலைகள் திணைக்களம்,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10.
தொலைபேசி இல. : 94(11)2473328
தொலைநகல் : 94(11)2432044
மின் - அஞ்சல் : srs.slr@gmail.com
இணையத்தளம் : www.railway.gov.lk

தவிசாளர்,
திணைக்கள பெறுகைக் குழு,
இலங்கைப் புகையிரத சேவைகள்.

தொடர்பிலக்கம் SRS/F.7080

9-515

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

**பாவிக்க முடியாத பொருட்களை பிரசித்த ஏல விற்பனை செய்தல்**

பொலிஸ் திணைக்களம் - யாழ்ப்பாண பிராந்தியம்

பொலிஸ் திணைக்களத்தின் யாழ்ப்பாண பிராந்தியத்திற்குட்பட்ட பொலிஸ் நிலையங்களில் பாவிக்கப்பட்டு பாவனைக்குதவாத கீழ்க்குறிப்பிடப்பட்ட ஆவணத்தில் பதிவுசெய்யப்பட்ட பொருட்கள் பிரசித்த ஏல விற்பனையில் விற்பனை செய்வதற்கு 2014.09.23 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு யாழ்ப்பாண பொலிஸ் அத்தியட்சகர் அலுவலக கட்டிடத் தொகுதியில் நடைபெறும்.

2014.09.22 ஆந் திகதி பி. ப. 1.00 மணி தொடக்கம் பி. ப. 4.00 மணிவரை உரிய பொருட்களைப் பார்வையிட முடியும்.

ஏல விற்பனை நடைபெறும் இடத்திற்கு பார்வையிட வரும் எல்லோரும் தங்களை அடையாளப்படுத்துவதற்கு தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டினை கொண்டுவருதல் வேண்டும்.

ஏல விற்பனையில் வாங்கும் பொருட்களுக்கு பணத்தினைக் கொடுத்து பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ள வேண்டும். வேறுவித மான கொடுக்கல் வாங்கல் செய்யும் முறையினைப் பாவிக்க முடியாது (காசோலை மற்றும் கடன் அட்டை).

ஏல விற்பனையில் பணத்திற்கு வாங்கும் பொருட்கள் 2014.09.23 ஆந் திகதி பி. ப. 4.00 மணிக்கு முன்பாக ஏல விற்பனை நடைபெறும் இடத்திலிருந்து அகற்றப்பட வேண்டும். அகற்றப்படாத பொருட்களுக்கு எங்களால் உத்தரவாதம் வழங்க முடியாது.

ஏலத்திற்காகச் சமர்ப்பிக்கப்படுகின்ற பொருட்கள் தொடர்பான விற்றல், ஏலம் கோருதல், முடிவெடுத்தல் போன்றவற்றைத் தீர்மானிப்பது ஏலதாரியினாலும் ஏல விற்பனை சபையாலுமே மேற்கொள்ளப்படும்.

ஏல விற்பனை சபையின் தீர்மானமே இறுதித் தீர்வாகும்.

டபிள்யூ. பீ. விமலசேன,
பொலிஸ் அத்தியட்சகர்,
யாழ்ப்பாண பிராந்தியம்.

**அட்டவணை**

| இல. | பொருட்களின் வகை | தொகை |
|---|---|---|
| 1 | வெஸ்ரின் | 50 |
| 2 | இரும்புக் கதிரை | 40 |
| 3 | குளிர்சாதனப் பெட்டி | 02 |
| 4 | நீர் வடிகட்டி | 19 |
| 5 | நீர் கொதிப்பான் | 28 |
| 6 | இரும்பு வாளி | 62 |
| 7 | மின் நீர் இறைக்கும் இயந்திரம் | 12 |
| 8 | மல்ரி பொட் | 11 |
| 9 | அலுமினிய சட்டி (பெரிது) | 17 |
| 10 | அலுமினிய சட்டி (நடுத்தரம்) | 62 |
| 11 | அலுமினிய சட்டி (சிறிது) | 50 |
| 12 | துருவலை | 17 |
| 13 | காஸ் அடுப்பு | 23 |
| 14 | அரிப்பான் | 06 |
| 15 | சின்ன தாச்சி | 13 |
| 16 | கோடாரி | 10 |
| 17 | மண்வெட்டி | 11 |
| 18 | வீசி கத்தி | 08 |
| 19 | மின் கேத்தல் | 08 |
| 20 | மின் துருவலை | 03 |
| 21 | தள்ளுவண்டி | 10 |
| 22 | புத்துவெட்டி | 01 |
| 23 | தட்டச்சு இயந்திரம் (சிங்களம்) | 08 |
| 24 | தட்டச்சு இயந்திரம் (ஆங்கிலம்) | 07 |
| 25 | தொலைநகல் இயந்திரம் | 05 |
| 26 | தொலைக்காட்சி | 07 |
| 27 | தொலைக்காட்சி அன்ரனா | 02 |
| 28 | மேசை மின் காற்றாடி | 11 |
| 29 | ஸ்ரான்ட் மின் காற்றாடி | 13 |
| 30 | சீலிங் மின் காற்றாடி | 46 |
| 31 | கசட் வானொலி | 29 |
| 32 | வானொலி | 05 |
| 33 | அரிக்கன் லாம்பு | 92 |
| 34 | ரோச் லைட் | 89 |
| 35 | பெற்றோல் மெக்ஸ் | 17 |
| 36 | லைட் | 14 |
| 37 | போக் லைட் | 02 |
| 38 | சேர்ச் லைட் | 03 |
| 39 | மக் லைட் | 10 |
| 40 | கொண்டு திரியும் லைட் | 17 |
| 41 | சைக்கிள் | 42 |
| 42 | புல்லு வெட்டும் இயந்திரம் | 01 |
| 43 | சைக்கிள் பம்ப் | 09 |
| 44 | பெரிய கத்தி | 01 |
| 45 | சிறிய கத்தி | 20 |
| 46 | சட்டி | 01 |
| 47 | அவசர லைட் | 04 |
| 48 | பிறின்டர் | 01 |
| 49 | பிலென்டர் | 01 |
| 50 | வேசன் அலுமினியம் | 07 |
| 51 | மேசைக்கத்தி | 04 |
| 52 | சைக்கிள் கூடை | 10 |
| 53 | சைக்கிள் பூட்டு | 10 |
| 54 | சைக்கிள் சீட் | 11 |
| 55 | சைக்கிள் மணி | 10 |
| 56 | சாந்தகப்பை | 03 |
| 57 | அதிக குளிரூட்டி | 04 |
| 58 | அயன் பெட்டி | 01 |
| 59 | முள்ளு அலவாங்கு | 06 |
| 60 | தீயணைப்பு உபகரணம் | 01 |
| 61 | சைக்கிள் சாவி | 07 |
| 62 | பன்ச்சர் | 09 |
| 63 | அலுமினியம் யொக் | 03 |
| 64 | முள்ளுவிறாண்டி | 02 |
| 65 | கூரைத்தகரம் | 35 |
| 66 | சவல் | 08 |
| 67 | சேர்ச் லைட் | 04 |
| 68 | குறடு | 07 |
| 69 | வாள் | 02 |
| 70 | பூட்டு திறப்பு | 05 |
| 71 | ஏணி | 06 |
| 72 | பித்தளை மணி | 02 |
| 73 | ஸ்குரூ சாவி | 03 |
| 74 | கரண்டி | 03 |
| 75 | சிறிய காஸ் சிலிண்ரர் | 03 |
| 76 | அலவாங்கு | 01 |
| 77 | மர அரிவாள் | 01 |
| 78 | மின் மர அரிவாள் | 01 |
| 79 | வீடியோ கமெரா | 01 |

9-659

## பாவித்த பொருட்கள் பகிரங்க ஏல விற்பனை

பொலிஸ் திணைக்களம் – காங்கேசன்துறைப் பிரிவு

பொலிஸ் திணைக்களத்தின் காங்கேசன்துறைப் பிரிவுக்கு உட்பட்ட பொலிஸ் நிலையங்களில் பாவித்து ஒதுக்கப்பட்ட பின்வரும் பட்டியலில் காணப்படும் பொருட்கள் பகிரங்க ஏல விற்பனைக்கு 2014, செத்தெம்பர் மாதம் 24 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு காங்கேசன்துறை பொலிஸ் நிலைய வளாகத்தினுள் நடைபெறும்.

தாங்கள் அடையாளம் காட்டிய பின் 2014, செத்தெம்பர் மாதம் 23 ஆந் திகதி பி. ப. 1.00 மணி முதல் பி. ப. 4.00 மணிவரை பொருட்களைப் பார்வையிட முடியும்.

ஏல விற்பனை நடைபெறும் இடத்தினுள் நுழையும் அனைவரும் தமது அடையாளத்தை உறுதிசெய்வதற்கு தேசிய ஆள் அடையாள அட்டையை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டை கொண்டுவருதல் வேண்டும்.

ஏல விற்பனையில் வாங்கப்படும் பொருட்களுக்கு அவ்விடத்தில் பணத்தினைக் கொடுத்து பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். வேறு முறைகளில் பணத்தினைச் செலுத்துதல் செல்லுபடியாகாது.

ஏல விற்பனையில் பெற்றுக்கொண்ட பொருட்களை 2014, செத்தெம்பர் மாதம் 24 ஆந் திகதி பி. ப. 4.00 மணிக்கு முன்னர் அந்த இடத்திலிருந்து எடுத்துல் செல்லுதல் வேண்டும். அவ்வாறு எடுத்துச்செல்லாத பொருட்களுக்கு பொறுப்பு ஏற்றுக்கொள்ள முடியாது.

ஏல விற்பனையில் பொருட்களை முன்வைத்தல் ஆரம்ப விலைகோருதல், விற்றல், இறுதியான விலை கோருதல், முக்கிய காரணத்திற்காக பொருட்களை விற்பனையில் இருந்து வெளியேற்றுதல் போன்றவை சம்பந்தமாக விற்பனைக் குழுவினரால் முடிவுகள் எடுக்கப்படும்.

விற்பனைக் குழுவினரின் முடிவுகள் இறுதியான முடிவு ஆகும்.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்,
காங்கேசன்துறை.

### பட்டியல்

| தொடர் இல. | பொருட்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | டீவீடீ பிளேயர் | 03 |
| 2 | டீவீடீ ரிமோட்கொன்றோல் | 04 |
| 3 | வீடியோ இயந்திரம் | 03 |
| 4 | சீடீ ரைற்றர் | 07 |
| 5 | யூபிஎஸ் பற்றி | 03 |
| 6 | கணனி பிரின்டர் | 07 |
| 7 | போட்டோ கொப்பி இயந்திரம் | 05 |
| 8 | தொலைக்காட்சி | 05 |
| 9 | கணனி கீ போட் | 02 |
| 10 | கசட் ரேடியோ | 40 |
| 11 | சிறிய ரேடியோ | 60 |
| 12 | அலக்கா டெல் தொலைபேசி | 03 |
| 13 | டீயிட்டல் ஸ்பீக்கர் போன் | 01 |
| 14 | மண்வெட்டி (தலை) | 49 |
| 15 | தொலைபேசிப் பெட்டி | 01 |
| 16 | பூங்கன்று வெட்டும் கத்தி | 01 |
| 17 | விளக்கு | 03 |
| 18 | டரகன் ரோச் பற்றி | 31 |
| 19 | டியூப்லைட் செட் | 112 |
| 20 | றொப்லைட் | 73 |
| 21 | பெற்றோல் மெக்ஸ் | 07 |
| 22 | கெலயன் விளக்கு | 103 |
| 23 | எமர்ஜன்சி விளக்கு | 11 |
| 24 | டியூப்லைட் சோக் | 24 |
| 25 | மேசை மின்விசிறி | 19 |
| 26 | ஸ்டான்ட் மின்விசிறி | 07 |
| 27 | இரும்பு ஸ்டீல் கபட் | 07 |
| 28 | கூரை மின்விசிறி | 66 |
| 29 | வீல்பறோ | 14 |
| 30 | சவல் | 07 |
| 31 | மண்வெட்டி | 28 |
| 32 | கூரை மின்விசிறி தட்டு | 09 |
| 33 | தண்ணீர் பில்டர் | 31 |
| 34 | பொயிலர் | 22 |
| 35 | மல்டி பொட் | 17 |
| 36 | பீவோமர் | 01 |
| 37 | நீர்த்தாங்கி | 06 |
| 38 | பூஸ்டர் | 06 |
| 39 | தராசு | 02 |
| 40 | மின்சார கேத்தல் | 30 |
| 41 | மின்சார அயன் பெட்டி | 05 |
| 42 | மின்சார நீர்பம்பி | 25 |
| 43 | புல் வெட்டும் மெஷின் | 04 |
| 44 | அதிகுளிர்சாதனப் பெட்டி | 08 |
| 45 | எண்ணெய்க் கரண்டி | 07 |
| 46 | அதி குளிர்சாதன பவர்காட் | 02 |
| 47 | பெக்ஸ் மெஷின் | 12 |
| 48 | றிப் சுவிச் | 03 |
| 49 | கல்குலேட்டர் | 30 |
| 50 | ஹீட்டர் | 10 |
| 51 | பூவாளி | 06 |
| 52 | பிக்கான் | 19 |
| 53 | தலைமுடி வெட்டும் மெஷின் | 01 |
| 54 | பெரிய சட்டி 16" | 53 |
| 55 | பெரிய சட்டி 24" | 32 |
| 56 | பெரிய சட்டி 30" | 12 |
| 57 | பெரிய சட்டி 32" | 12 |
| 58 | பெரிய சட்டி 21" | 17 |
| 59 | தாச்சி சட்டி | 05 |
| 60 | பெரிய சட்டி 12" | 12 |
| 61 | மீன்வெட்டும் கத்தி | 08 |
| 62 | சோற்றுக் கரண்டி | 06 |
| 63 | ஸ்டேபர் மெஷின் | 23 |
| 64 | றைஸ்குக்கர் | 01 |
| 65 | தொலைபேசி | 03 |
| 66 | அன்டனா வயர் கேபிள் | 17 |
| 67 | குளியலறை ஸ்டாண்ட் | 01 |
| 68 | சைக்கிள் | 46 |
| 69 | சைக்கிள் றிம் | 02 |
| 70 | சைக்கிள் பூட்டு | 01 |
| 71 | சைக்கிள் சீட் | 01 |

| தொடர் இல. | பொருட்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 72 | சைக்கிள் டைனமோ | 06 |
| 73 | சைக்கிள் பெல் | 02 |
| 74 | சைக்கிள் காற்று அடிக்கும் பம் | 06 |
| 75 | கோடரி | 09 |
| 76 | வேலிக்கம்பி துண்டு | 03 |
| 77 | சுவர் கடிகாரம் | 18 |
| 78 | மேசன் கரண்டி | 03 |
| 79 | தண்ணீர் பில்டர் | 02 |
| 80 | இரும்புச் சங்கிலித் துண்டு | 01 |
| 81 | இரும்பு குசன் கதிரைத் துண்டுகள் | 94 |
| 82 | இரும்பு கதிரைத் துண்டுகள் | 104 |
| 83 | சவல் | 01 |
| 84 | அலுவலக சுழல் கதிரை | 01 |
| 85 | குப்பைவாரி | 21 |
| 86 | பிளைண்டர் | 09 |
| 87 | தீ அணைக்கும் கருவி | 02 |
| 88 | அலுமினியத் தட்டு | 58 |
| 89 | அலுமினிய குவளை | 77 |
| 90 | அலுமினியம் கொரொஸ் | 14 |
| 91 | முட்கரண்டி | 02 |
| 92 | வாளி - பெரியது | 15 |
| 93 | வாளி - சிறியது | 58 |
| 94 | மெஸ் டின் | 432 |
| 95 | காஸ் அடுப்பு | 59 |
| 96 | காஸ் சிலிண்டர் 12.5 | 14 |
| 97 | மின்சார திருவலகு | 12 |
| 98 | அன்டனா | 23 |
| 99 | திருவுபலகை | 13 |
| 100 | சட்டி | 14 |
| 101 | தட்டச்சு எழுத்து இயந்திரம் - ஆங்கிலம் | 18 |
| 102 | தட்டச்சு எழுத்து இயந்திரம் - தமிழ் | 12 |
| 103 | தட்டச்சு எழுத்து இயந்திரம் - சிங்களம் | 21 |
| 104 | டெக்கர் லைட் | 02 |
| 105 | அலுமினிய முட்டி | 18 |
| 106 | கதவு பூட்டு | 03 |
| 107 | மேசை விளக்கு | 01 |
| 108 | பன்சர் | 19 |
| 109 | றோணியோ இயந்திரம் | 01 |
| 110 | பவர் காட் | 06 |
| 111 | சென்சோ | 01 |
| 112 | தகரம் துண்டுகள் | 30 |
| 113 | ஸ்டெப் வைசர் | 02 |
| 114 | தேநீர் கரண்டி | 04 |
| 115 | வோட் ரொப்ஸ் | 01 |
| 116 | பற்றி | 03 |
| 117 | கதவு கென்டல் | 01 |
| 118 | பிணைச்சல் | 01 |
| 119 | சைக்கிள் ஸ்டாண்ட் | 04 |
| 120 | சைக்கிள் பெல் | 02 |
| 121 | சைக்கிள் பூட்டு | 01 |
| 122 | வாள் | 01 |
| 123 | முள்ளு மண்வெட்டி | 14 |
| 124 | கணினி கதிரை | 01 |
| 125 | கத்தி | 33 |
| 126 | திறப்பு பூட்டு | 38 |
| 127 | மணி | 03 |
| 128 | வீசுக்கத்தி | 40 |
| 129 | வெட்டுக்கத்தி | 12 |
| 130 | வெக்கும் கிளீனர் | 02 |
| 131 | கம்பி றோல் | 04 |
| 132 | மைக் டோர்ச் | 02 |
| 133 | சேச் லைட் | 03 |
| 134 | கட்டர் | 02 |
| 135 | பேப்பர் கட்டர் | 01 |
| 136 | அலுமினியம் பெக்கட் | 08 |
| 137 | பூஸ்டர் | 01 |
| 138 | அயன் போர்ட் | 01 |
| 139 | டெக் உபகரணம் | 01 |
| 140 | றெக்கன் லைட் | 01 |
| 141 | குளிரூட்டி | 01 |
| 142 | பாண் தட்டு | 02 |
| 143 | பாண் அச்சு | 09 |
| 144 | நாசினி விசுறும் டாங்கி | 03 |
| 145 | அலவாங்கு | 06 |
| 146 | ஸ்டூல் | 03 |
| 147 | பெரட் செட் | 01 |
| 148 | பெரட் பவர் சப்லைட் யுனிட் | 01 |
| 149 | பெரட் டைப்பொட் அன்டனா | 01 |
| 150 | பெரட் 12 வோல்ட் 70 பற்றி | 01 |
| 151 | பொடர் | 10 |
| 152 | மின்சார அச்சு இயந்திரம் | 02 |
| 153 | அலுமினிய கோப்பை | 06 |
| 154 | அலுமினியத் துண்டு | 05 |
| 155 | அல்கடின் பைப் | 100 |
| 156 | ஸ்டிமாட் | 03 |
| 157 | பிறஸர் குக்கர் | 01 |
| 158 | காஸ் குக்கர் | 03 |
| 159 | மைக் ஸ்டான்ட் | 01 |
| 160 | அம்பிலி வயர் | 01 |
| 161 | கமரா பிளஸ்ஸர் | 01 |
| 162 | குளிரூட்டி | 01 |
| 163 | இடியப்ப உரல் | 02 |
| 164 | கமரா | 01 |
| 165 | ஸ்கானர் மெசின் | 01 |
| 166 | புட்வெல் | 01 |
| 167 | துணி வெட்டும் கத்தரிக்கோல் | 02 |
| 168 | இரும்பு குசன் கதிரை | 05 |
| 169 | சிட்டிலிங் தொலைபேசி | 01 |
| 170 | பென்டர் | 01 |
| 171 | கல்குலேட்டர் | 01 |
| 172 | தீ அணைப்பு உபகரணம் | 01 |
| 173 | பருதி வட்டம் | 02 |
| 174 | அலுமினியம் முட்டி | 01 |
| 175 | தட்டச்சு - ஆங்கிலம் | 01 |
| 176 | அலுமினிய கரண்டி | 06 |
| 177 | தேநீர் கரண்டி | 03 |
| 178 | மேசைக்கரண்டி | 10 |
| 179 | அலுமினிய தாச்சி | 02 |
| 180 | றோஸ்பான்செட் | 02 |
| 181 | பெரிய அலுமினிய சட்டி | 06 |
| 182 | மண்வெட்டி | 02 |
| 183 | இரும்பு வாளி | 02 |
| 184 | கொரோஸ் | 06 |

| தொடர் இல. | பொருட்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 185 | புல் வெட்டும் மெஷின் | 01 |
| 186 | விளக்கு (லன்தேரம்) | 09 |
| 187 | அலவாங்கு | 02 |
| 188 | ஸ்பொட் லைட் | 06 |
| 189 | ஸ்டேபிளர் மெஷின் | 08 |
| 190 | வர்ண தொலைக்காட்சி | 01 |
| 191 | கல்வனைஸ் வாளி | 10 |
| 192 | பெரிய சட்டி | 03 |
| 193 | மண்வெட்டி | 02 |
| 194 | கெலஜன் விளக்கு | 03 |
| 195 | இரும்பு குசன் கதிரை | 06 |
| 196 | பொயிலர் | 01 |
| 197 | றேடியோ | 01 |
| 198 | தண்ணீர் பில்டர் | 01 |
| 199 | மின்சார கேத்தல் | 01 |
| 200 | கத்தி | 02 |
| 201 | மைக் டோச் ஸ்டாண்ட் | 08 |
| 202 | தண்ணீர் பொயிலர் | 04 |
| 203 | ட்ரகன் லைட் | 03 |
| 204 | டோர்ச் லைட் ஒரிஜினல் | 04 |
| 205 | சாதாரண டோர்ச் லைட் | 31 |
| 206 | கோடரி | 01 |
| 207 | வீசிக்கத்தி | 11 |
| 208 | அலுமினிய முட்டி | 06 |
| 209 | கத்தி | 06 |
| 210 | வயர் கட்டர் | 02 |
| 211 | எல் வயறிங் | 05 |
| 212 | அலுமினியம் நீர்க் கோப்பை | 17 |
| 213 | தீ அணைக்கும் கருவி | 01 |
| 214 | சீருடைத் துணி 2006 மீற்றர் | 310 |
| 215 | சீருடைத் துணி 2007 மீற்றர் | 100 |

9-660

---

## மாவட்ட/நீதிவான் நீதிமன்றம் - மன்னார்

மாவட்ட நீதிமன்ற அரச சொத்துக்களின் ஏல விற்பனை

மன்னார் மாவட்ட/ நீதிவான் நீதிமன்ற கீழ்க்குறிப்பிடப்படும் அரச சொத்துக்கள் எதிர்வரும் 2014.10.15 ஆந் திகதியன்று பி. ப. 3.00 மணி முதல் பி. ப. 5.00 மணிவரை இந்நீதிமன்ற வளவில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

1. பொது மக்கள் எவரும் இந்நீதிமன்றப் பதிவாளரின் அனுமதியுடன் குறிக்கப்பட்ட பொருட்களை ஏல விற்பனை தொடங்குவதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்னர் பார்வையிடலாம்.

2. எப்பொருட்களையும் விலைகள் ஒவ்வாத பட்சத்தில் விற்பனையிலிருந்து மீளப்பெறுவதற்கு இந்நீதிமன்றத்திற்கு உரிமையுண்டு.

3. பொருட்களைக் கொள்வனவு செய்பவர்கள் உடனடியாகப் பணத்தைச் செலுத்தி உரிய பொருட்களை நீதிமன்ற வளவிலிருந்து அப்புறப்படுத்திவிடல் வேண்டும்.

4. பொருட்களை விலை வைத்து வாங்குவோர் தமது அடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்கு தேசிய ஆள் அடையாள அட்டையைக் கொண்டுவருதல் வேண்டும்.

கே. ஆனந்தி,
மாவட்ட நீதிபதி/நீதிவான்,
மாவட்ட/நீதிவான் நீதிமன்றம்,
மன்னார்.

மாவட்ட/நீதிவான் நீதிமன்றம்,
மன்னார்,
2014, செத்தெம்பர் 01.

**மன்னார் மாவட்ட நீதிமன்ற பகிரங்க ஏலவிற்பனைப் பொருட்கள் பற்றிய விபரம்**

| தொடர் இலக்கம் | பொருட் பதிவேட்டு பக்க இலக்கம் | பொருட்களின் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | B-4 | Bench with back rest | 02 |
| 02 | C-8 | Chair Arm | 12 |
| 03 | C-8 | Chair Arm cushion | 03 |
| 04 | C-8 | Chair (Rev. Exe.) | 01 |
| 05 | F-20 | Fan (Table) | 01 |
| 06 | F-20 | Fan (Pedestral) | 02 |
| 07 | W-49 | Wall clock | 01 |
| 08 | W-49 | Wheel barrow | 01 |

9-709

---

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

உடவெல, தரண, வெலன்கெல என்ற இடத்தை வசிப்பிடமாகக் கொண்ட (1) உபாலி திலகரட்ண மற்றும் (2) பிரியதர்ஷணி திலகரட்ன ஆகிய நாம் இருவரும் இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பொது மக்களுக்கு இத்தால் அறியத்தருவது யாதெனில்,

பக்மிப்புவ, வெள்ளவராவையைச் சேர்ந்த அகுறன் பேடிகே நிமால் அவர்களுக்கு எங்களால் வழங்கப்பட்டதும் ஐக்கிய அமெரிக்கா (யூஎஸ்ஏ), வாஷிங்டன் டி. சீ. இலங்கை தூதரகத்தின் இரண்டாவது செயலாளர் பிரபாஷினி பொண்ணம்பெறுமா அவர்களின் முன்னிலையில் 2005, திசெம்பர் மாதம் 27 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட அற்றோணி தத்துவத்தை இத்தால் நாங்கள் இரத்துச்செய்து, இல்லாதொழிக்கிறோம்.

குறித்த அற்றோணி தத்துவம் சம்பந்தமாக அவரால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கைகள், கொடுக்கல் வாங்கல்களுக்கு நாங்கள் எந்தவிதத்திலும் பொறுப்பு கூற மாட்டோம்.

உபாலி திலகரட்ண மற்றும்
பிரியதர்ஷணி திலகரட்ண.

9-651

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

கேகாலை மாவட்டத்தில் மொலகொட (தபால்), கல்பொல, ஏ47/1 எனும் விலாசத்தில் வசிக்கும் ஹேரத் முதியன்சேலாகே மனோஜ் தர்மவர்தன ஆகிய என்னால், கேகாலை மாவட்டத்தில் மொலகொட (தபால்), கல்பொல, ஏ47/ 1 எனும் விலாசத்தில் வசிக்கும் ஹேரத் முதியன்சேலாகே சிரிவர்தன ராலஹாமி என்பவருக்கு வழங்கப் பட்டிருந்த பிரசித்த நொத்தாரிசும் வழக்கறிஞருமான பண்டார அலுத்வத்தை என்பவரினால் 2010, சனவரி மாதம் 22 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் ஊவா, சப்பிரகமுவ வலய பதிவாளர் அலுவலகத்தில் இரத்தினபுரி அற்றோணி புத்தகத்தில் 5 ஆம் தொகுதியில் 104 ஆம் பக்கத்தில் திகதிப் புத்தக இல. 37 இன்கீழ் 2010, பெப்புருவரி மாதம் 12 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்டதுமான இலக்கம் 5858 கொண்ட அற்றோணி அதிகாரப்பத்திரம் 2014.06.21 ஆந் திகதியிலிருந்து இரத்துச்செய்யப்பட்டுள்ளது. மேலும், மேற்கூறப்பட்ட அற்றோணி தத்துவதாரராகிய ஹேரத் முதியன்சேலாகே சிரிவர்தன ராலஹாமி என்பவரால் இதன் பின்னர் எனது அற்றோணி தத்துவக் காரராக இருந்து மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கைகளுக்கும் நான் பொறுப்பு கூற மாட்டேன் என்பதை பொது மக்களுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

எம். எம். மனோஜ் தர்மவர்தன.

9-645

---

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மஹரகம, பமுனுவ தேவால வீதி, இல. 148/ 1 இல் வசிக்கும் தொடவத்த தோன மெனுவெல் கயா கங்கா தொடவத்த (தேசிய ஆள் அடையாள அட்டை இல. 727391045V) ஆகிய என்னால் மஹரகம, பமுனுவ தேவால வீதி, இல. 148/ 1 இல் வசிக்கும் அக்மீமன ஆசாரிகே சன்திரலதா (தேசிய ஆள் அடையாள அட்டை இல. 485950575V) என்ற நபருக்கு பிரசித்திபெற்ற நொத்தாரிசு எம். ஆரிப் அவர்களால் 2005 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 10 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட 1168 ஆம் இலக்கத்தையுடைய அற்றோணி தத்துவம் இன்று தொடக்கம் (2014.08.22) இரத்துச்செய்து வெற்றும் வெறிதாக்குவதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் சகல பிரசைகளுக்கும் இத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதன் பிறகு அக்மீமன ஆசாரிகே சன்திரலதா என்பவர் என் பெயரால் மேற்கொள்ளும் எந்தவித நடவடிக்கைகள் தொடர்பாகவும் நான் பொறுப்புக் கூற மாட்டேன் என்று இத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொடவத்த தோன மெனுவெல் கயா கங்கா தொடவத்த.

9-519

---

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொழும்பு 5, இல. 5பி, கிறிமண்டல மாவத்தை, நாரஹேன்பிட்டியை வசிப்பிடமாகக் கொண்டவரும் (635464909V) ஆம் இலக்க தேசிய ஆள் அடையாள அட்டையின் உரிமையாளருமாகிய தமாரா இராணி சந்திரலேகா பெரேரா ஜயவர்தன ஆகிய நான், இலங்கை பொது மக்களுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் இத்தால் அறியத்தருவது யாதெனில்,

இரத்மலானை, இல. 444/11, காலி வீதியை வதிவிடமாகக் கொண்ட அப்துல் அசீஸ் அப்துல் கறீம் மொகமது அப்சால் (தே. அ. அ. இல. 722552032V) அவர்களுக்கு என்னால் வழங்கப்பட்டதும் பிரசித்த நொத்தாரிசு எம். எஸ். எம். ஃபாஹீம் அவர்களால் 1086 ஆம் இலக்கத்தைக் கொண்டதும் 2010.12.30 ஆந் திகதியன்று அத்தாட்சிப் படுத்தப்பட்டதுமான குறித்த விசேட அற்றோணி தத்துவத்தை இத்தால் இரத்துச்செய்து இல்லாதொழித்து விடுகிறேன்.

தமாரா இராணி சந்திரலேகா பெரேரா ஜயவர்தன.

9-512

---

## விசேட அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொழும்பு 10, போதிராஜ மாவத்தை, 765/ 433 ஆம் இலக்கத்தில் வசிக்கும் சகலவள்ளி ஆராச்சிகே குசுமாவதி ஆகிய என்னால் பிரசித்திபெற்ற நொத்தாரிசு திருமதி ஏ. நேபட் ஆராச்சி என்பவரால் 2012.10.16 ஆந் திகதி எழுதி உறுதிப்படுத்தப்பட்ட 1836 ஆம் இலக்க அற்றோணி அதிகாரத்தின் மூலம் கொழும்பு 10, போதிராஜ மாவத்தை, 765/433 இல் வசிக்கும் நிஹரேபொல முதியன்சேலாகே தினுக ரங்கஜீவ என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணி அதிகாரப்பத்திர ஏட்டின் 14 ஆம் பிரிவு 24 ஆம் பக்க 4773 ஆம் இலக்க நாளேடு மற்றும் 2012.12.24 ஆந் திகதியின்கீழ் பதிவுசெய்யப்பட்ட அற்றோணி அதிகாரத்தை 2014.08.05 ஆந் திகதி முதல் செல்லுபடியாகும் வண்ணம் இதில் இரத்துச்செய்து மேற்படி அற்றோணி அதிகாரியான நிஹரேபொல முதியன்சேலாகே தினுக ரங்கஜீவ என்பவரால் இதற்குப் பின்னர் எனது அற்றோணி அதிகாரியாகச் செய்கின்ற எந்த நடவடிக்கைகளுக்கும் நான் பொறுப்புதாரியாக இல்லாதவாறு வலுவிழக்கச் செய்வதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகிறேன்.

சகலவள்ளி ஆராச்சிகே குசுமாவதி.

9-581

---

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

கண்டி, நுகவெலை, குருநாகல் பாதை, 215/2 ஆம் இலக்க விலாசத்தில் வசிக்கும் இந்தீவர உதித பண்டார ஜயவர்தன (தேசிய ஆள் அடையாள அட்டை இல. 783315394V) ஆகிய நான், மாத்தளை பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. எம். டபிள்யூ. ஜீ. கபிலரத்ன பண்டா என்பவரினால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 216 ஆம் இலக்க 2009.07.31 ஆந் திகதிய அற்றோணித் தத்துவப்பத்திரத்தின்கீழ் கண்டி, மஹய்யாவ, காட்டுப்பள்ளி பாதை, 4 ஆம் இலக்க விலாசத்தில் வசிக்கும் மதம்பெரும ஆரச்சிலாகே சுதேஷ் பண்டார மன்திலக்க (தேசிய ஆள் அடையாள அட்டை இல. 781880191V) என்பவருக்கு வழங்கப்பட்டிருந்த விசேட அற்றோணி அதிகாரப்பத்திரத்தை இத்தால் அழித்து இரத்துச்செய்வதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் இத்தால் அறிவிப்பதுடன் அவரினால் இதன் பின்னர் என் சார்பாக செய்யப்படும் எவ்விதமான கருமத்திற்கும் நான் பொறுப்பில்லை என அறிவித்துக் கொள்கின்றேன்.

இந்தீவர உதித பண்டார ஜயவர்தன.

9-625

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : மெதகம கிறீண் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவிலக்கம் : பீவீ 100307
கம்பனியின் பதிவு முகவரி : இல. 40, கோல்ஃபேஸ் கோட் 2, கொழும்பு 3

செக்கிரடேரியல் (பிறைவேட்) லிமிட்டெட்
(பீவீ 5658).

9-555

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : ஒபிர் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவிலக்கம் : பீவீ 100011
பதிவு முகவரி : இல. 41-1/1, கிரெகரி வீதி, கொழும்பு 7

செக்கிரடேரியஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
(பீவீ 5958).

9-554

## பகிரங்க அறிவித்தல்

சின் லங்கா கோப்பரேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் கூட்டிணைக்கப்படல் தொடர்பாக இத்தால் அறிவிக்கப் படுகின்றது :-

சின் லங்கா கோப்பரேஷன் (பிறைவேட்) லிமிட்டெட் என்ற பெயரில் புதிய கம்பனியொன்று 2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 21 ஆந் திகதி பீவீ 100418 ஆம் இலக்கத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென்பதையும், புதிய கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தின் விலாசமானது எம் அன்ட் என் கட்டிடம் (5 ஆம் மாடி), இல. 2, டீல் பிளேஸ், கொழும்பு 3 இல் அமைந்துள்ளது என்பதையும் இத்தால் நாம் பகிரங்கமாக அறியத்தருகின்றோம்.

கந்தையா நீலகண்டன்,
தலைவர்,
என் அன்ட் என் ஏஜென்ஸ் அன்ட் செக்ரட்டறீஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

எம் அன்ட் என் கட்டிடம் (5 ஆம் மாடி),
இல. 2, டீல் பிளேஸ்,
கொழும்பு 03.

9-578

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : சென்ட் ஏன்ஸ் கெயார் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவிலக்கம் : பீவீ 99953
கூட்டிணைப்புத் திகதி : 2014.07.28
பதிவு முகவரி : இல. 22, நொய்ஸ் வீதி, சிலாபம்

9-548

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி 2014.07.30 ஆந் திகதி முதல் கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : கொட்டுகொட வளவ்வ (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி பதிவு இலக்கம் : பீவீ 99978
பதிவு முகவரி : இல. 47/4, சீ டபிள்யூ டபிள்யூ கன்னங்கர மாவத்தை, கொழும்பு 7

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

9-699

## கம்பனியின் பதிவு குறித்தான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி பதிவுசெய்யப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பழைய பெயர் : லாப் மரிடைம் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவுசெய்த திகதி : 2014.08.26
கம்பனி இலக்கம் : பீவீ 100480
பதிவுசெய்த அலுவலக முகவரி : இல. 14, ஆர். ஏ. டி மெல் மாவத்தை, கொழும்பு 4

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

சட்டத்தரணி கீர்த்தி பத்திராஜ,
கம்பனிச் செயலாளர்.

9-698

**அறிவித்தல்**

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : சீ கல்ப் யூ கே (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 100361
*பதிவுசெய்யப்பட்டுள்ள அலுவலக முகவரி* : இல. 60/6ஏ, 10 ஆவது தெரு, விக்ரமசிங்ஹபுர, பத்தர முல்ல
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2014, ஓகத்து 19

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிசினெஸ் சொலுஷன்ஸ் அன்ட்
செக்கிரடரீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்.

9-540

---

**அறிவித்தல்**

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பெயர் மற்றும் இலக்கத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : குளோபல் ஏஜன்ட்ஸ் இன்டர்நஷனல் (பிறைவேட்) லிமிட்டெட்
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2014, ஓகத்து 27
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 100530
*பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்* : இல. 1, பர்ட் இடம், கிருலப்பனை, கொழும்பு 6

எக்கவுண்டிங் அன்ட் எலைட் சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்.

இல. 67ஏ, டேவிட்சன் வீதி,
கொழும்பு 4.

9-587

---

**அறிவித்தல்**

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : த வோடோ கியூப் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 100353
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 19.08.2014
*பதிவு அலுவலகம்* : இல. 54, ஸ்ரீ தம்மாதார வீதி, இரத்மலானை

*கம்பனியின் பெயர்* : த விலய்ங் விஸ்ஸிங் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 100471
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 25.08.2014
*பதிவு அலுவலகம்* : இல. 67/2, பைப் வீதி, கொழும்பு 5

கம்பனிச் செயலாளர்கள்.
பினான்சியெல் அன்ட் பிசினெஸ் அசோசியேட்
(பிறைவேட்) லிமிட்டெட்.

9-668

---

# அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள்

**மொறட்டுவை பிரதேச செயலாளர் பிரிவின் வெளிநாட்டு மதுபான தவறணைகளை குத்தகைக்கு விற்றல் - 2015**

*அரசால் அனுமதிக்கப்பட்ட கீழ்க்காட்டப்படும் பிரதேசத்தில் தகுந்த இடங்களில் 2015, சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் 2015, திசெம்பர் 31 ஆந் திகதி வரை தனியுரிமை அடிப்படையில் கீழ்வரும் நிபந்தனைகளில் வெளிநாட்டு மதுபானங்களை (உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மதுபானங்கள் உட்பட) விற்பனை செய்யும் பொருட்டு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.*

(i) *1982.08.20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள வெளிநாட்டு மதுபானத் தவறணைகளை குத்தகையில் விற்கும் நிபந்தனைகள்.*

(ii) *மதுபான வரி அனுமதிப்பத்திரம் தொடர்பாக தற்போதுள்ள பொது நிபந்தனைகள்.*

*2. கீழ்வரும் நிலையங்களிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய குறிப்பிட்ட மாதிரிப்படிவங்கள் மூலம் கேள்விப்பத்திரங்களை ரூபா 5,000 க்கு வைப்பிலிடப்பட்டமைக்கு ஏதேனும் பிரதேச செயலகம் ஒன்றிலிருந்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடனும் மற்றும் குறிப்பிட்ட பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட ஆவணங்கள் தொடர்பான சான்றிதழுடனும் அனுப்பி வைத்தல் வேண்டும். பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட ஆவணங்கள் தொடர்பாக சான்றிதழ் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள அதேபோன்று அந்த சான்றிதழில் உள்ளடக்கப்பட்ட ஏதேனும் சொத்தொன்று விற்கப்படாமலிருப்பின் அந்த ஆவணங்கள் தொடர்பான சான்றிதழ் 05 வருடங்களுக்கு செல்லுபடியாகும். வாடகை காலம் முடிவடைவதற்கு முன்பு ஆவணச் சான்றிதழின் செல்லுபடி காலம் முடிந்திருப்பின் முழுமையான வாடகை காலத்தில் செல்லுபடியானதாக இருக்கக்கூடிய ஆவணங்கள் தொடர்பான சான்றிதழ் ஒன்றை கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு இல்லாவிடின் காலத்தில்*

பாதி நாள் வரையிலான மிகுதி காலத்திற்கு மேலதிக ஆவணங்கள் தொடர்பான சான்றிதழ் ஒன்றை செல்லுபடிக் காலம் முடிவடைவதற்கு முன்பு குறைந்தபட்சம் ஒரு மாதத்திற்கு முன்னராவது சமர்ப்பித்தல் வேண்டும் :-

(அ) எந்தவொரு பிரதேச செயலகத்திலிருந்து ;
(ஆ) கொழும்பு 02, ஸ்ரேப்பிலர் வீதி, மதுவரி அலுவலகத்திலிருந்து ;
(இ) கொழும்பு மதுவரி சபை அலுவலகத்திலிருந்து.

3. உறையில் இட்டு முத்திரை பொறிக்கப்பட்ட ஒவ்வொரு கேள்விப் பத்திரமும் உள்ளடக்கப்பட்ட உறையின் இடது பக்க மேல் மூலையில் பின்வருமாறு குறிப்பிடல் வேண்டும் :-

"மொரட்டுவை பிரதேச செயலாளர் பிரிவில் 09 ஆம் இலக்கமுள்ள வெளிநாட்டு மதுபான விற்பனை தவறணைகளுக்கான கேள்விப்பத்திரம் - 2015"

2014.11.03 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு முன்பு மொரட்டுவை பிரதேச செயலாளருக்கு கிடைக்கும்வண்ணம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

கேள்விப்பத்திர உரிமையாளர்கள் கேள்விப்பத்திரங்களைப் பொறுப்பேற்கும் இறுதி நேரத்தில் மொரட்டுவை பிரதேச செயலகத்திற்கு வருதல் வேண்டும்.

4. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திர உரிமையாளர்கள் அச்சந்தர்ப்பத்திலேயே கொள்வனவு செய்தவராக அறிவிக்கப்படுவதுடன் குறிக்கப்பட்ட பணத்தை வைப்புச் செய்யப்பட்ட பிணைக் கட்டணமாக மொரட்டுவை பிரதேச செயலாளருக்கு செலுத்துதல் வேண்டும்.

5. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திர உரிமையாளருக்கு கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டமை அறிவிக்கப்பட்டதும் வாடகைக்கு விடுதலுக்கான நிபந்தனைகளைக் கைச்சாத்திட அல்லது குறிப்பிட்ட பிணைப் பணத்தை எதிர்காலத்தில் வைப்பிலிடத் தவறுமிடத்து அவர் வைப்பிலிட்ட கேள்விப்பத்திர பிணைப் பணத்தை இழப்பதுடன் அவரை குற்றவாளியென மதுவரி அனுமதிப்பத்திரக்காரர்களின் பட்டியலில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திர உரிமையாளர்கள் முழுமையான பிணைப்பணத்தை வைப்பிலிட்டு விற்பனை செய்யும் நிபந்தனைகள் அடங்கிய ஒப்பந்தத்தை கைச்சாத்திட்ட பின்னர் கேள்விப்பத்திர உரிமையாளர்களின் கேள்விப்பத்திர பிணைப்பணம் மறுபடி செலுத்தப்படும்.

6. எக்காரணமும் அறிவிக்கப்படாமல் ஒன்றையோ அல்லது அனைத்து கேள்விப் பத்திரங்களையோ மறுக்கும் அதிகாரம் பிரதேச செயலாளருக்கு உண்டு.

7. இந்த வெளிநாட்டு மதுபான தவறணைகள் நிலையத்தை பிரிவு இலக்கம் 09 இல் நிறுவுதல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திர உரிமையாளர் பிரிவினுள் தகுதியுள்ள கட்டிடமொன்றை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதுடன் அதன் பொருட்டு மதுவரி ஆணையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். கட்டிடமொன்றைப் பெற்றுக் கொடுக்கும் பொறுப்பினை பிரதேச செயலாளர் கொண்டிருக்கவில்லை. அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு மதுபான தவறணைகள் பட்டியல் கீழ்வருமாறு:-

| (அ) | (ஆ) | (இ) | (ஈ) | (உ) | (ஊ) | (எ) | (ஏ) |
|---|---|---|---|---|---|---|---|
| இலக்கம் | பிரிவு | பிரதேச மதுபான தவறணை உள்ளடக்கப்படும் பிரதேசம் | மதுபான தவறணை திறக்கப் படும் நேரம் | மதுபான விற்பனை நிலையம் மூடப்படும் நேரம் | கேள்விப் பத்திரத்தின் பொருட்டு வைப்பிலிடப் படும் தொகை ரூபா | கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள் ளப்படும் திகதியும் நேரமும் | விற்கப்படும் திகதி |
| 1 | மொறட்டுவை மாநகரசபை எல்லைக்குள் பிரிவு இல. 09 | மொறட்டுவை மாநகரசபை பிரதேசத்தில் பிரிவு இல. 09 காலி பாதை யின் மேற்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள மொரட்டுவெல்ல கிராமத்தில் மாத்திரம். | மு. ப.11.00<br>பி. ப. 5.00 | பி. ப. 2.00<br>பி. ப. 8.00 | 5,000 | 2014.11.03<br>மு.ப. 10.30 | 2014.11.03 |

*8. மேலதிக விபரங்களை மொறட்டுவை பிரதேச செயலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.*

*9. **முக்கியம்**.- 2014.11.03 ஆந் திகதிக்கு வாடகைக்குவிட இயலாத வெளிநாட்டு மதுபானத் தவறணைகள் 2014.11.17 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மறுபடியும் குத்தகையில் விற்கப்படும்.*

கே. சீ. நிரோசன்,
பிரதேச செயலாளர்,
மொறட்டுவை.

பிரதேச செயலகம்,
மொறட்டுவை,
2014, ஓகத்து 25.

9-643

---

# ஏல விற்பனைகள்

**டீஎப்சீசீ வங்கி**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்துகள் பகிரங்க ஏல விற்பனை**

***465, 466 மற்றும் 666 ஆம் இலக்க பிணை உறுதிகள் மூலம் அடகு வைக்கப்பட்ட உடைமைகளின் விபரம்***

**மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், நீர்கொழும்பு பதிவுப் பிரிவுக்குட்பட்ட அலுத்குரு கோரளே, தாசியபற்று, தலாஹேனயில் அமைந்துள்ள கிரில்லகஹவத்த என அழைக்கப்படும் உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் ஜே. ஏ. ஆர். ஜயலத் அவர்களால் வரையப்பட்ட 2009 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதியிடப்பட்ட 37/2009 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 எனக் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு அதிலுள்ள கட்டிடங்கள், அமைப்புக்கள் மற்றும் அனைத்தும் உள்ளடங்கலாக நீர்கொழும்பு காணிப்பதிவகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.**

**(காணியின் விஸ்தீரணம் : 1ஏ. 1றூ. 0பே.)**

*(கொழும்பு பிரசித்த நொத்தாரிசு கே. டீ. ஏ. வீ. விஜேகோன் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2010 ஆம் ஆண்டு யூலை மாதம் 29 ஆந் திகதியிடப்பட்ட 465 மற்றும் 466 ஆம் இலக்க பிணை உறுதி, 2012 ஆம் ஆண்டின் ஓகத்து மாதம் 6 ஆந் திகதியிடப்பட்ட 666 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்/ 1938 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின்கீழ் கூட்டிணைந்த பீவீ14245 ஆம் இலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட இல. 10/1, கட்டுவபிட்டிய வீதி, நீர்கொழும்பு என்னுமிடத்தில் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ள (இதன் பின்னர் 'நிறுவனம்' என அழைக்கப்படும்) அக்குவா ஹச்சரீஸ் லங்கா (தனியார்) நிறுவனத்தினால் டீஎப்சீசீ வங்கிக்கு அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.)*

டீஎப்சீசீ வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2014 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 7 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை மு. ப. 11.00 மணிக்கு எம்மால் அதே இடத்தில் பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை**.- ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) ;
(4) மொத்த விளம்பரச் செலவு 75,000 ரூபா ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் 500 ரூபா ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2,000 ரூபா.

கொள்முதல் விலையின் மீதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு**.- 011-2442442 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் டீஎப்சீசீ வங்கியின் சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

"முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/ இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது."

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
